## மே – 22 – செவ்வாய்

### புனித றீட்டா

**பெருங்காற்றினாலும் புயலினின்றும் தப்பிக்கப் புகலிடம் தேட விரைந்திருப்பேனே! திபா. 55:8**

### முதல் வாசகம் : யாக்கோபு 4 : 1 – 10

சகோதர சகோதரிகளே!,உங்களிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படக் காரணமென்ன? உங்களுக்குள்ளே போராடிக் கொண்டிருக்கும் சிற்றின்ப நாட்டங்கள் அல்லவா? நீங்கள் ஆசைப்படுவது கிடைக்காததால் கொலை செய்கிறீர்கள். பேராசை கொள்கிறீர்கள் அதைப் பெறமுடியாததால் சண்டை சச்சரவு உண்டாக்குகிறீர்கள். அதை நீங்கள் ஏன் பெறமுடிவதில்லை. நீங்கள் கடவுளிடம் கேட்பதில்லை. நீங்கள் கேட்டாலும் ஏன் அடைவதில்லை? ஏனெனில் நீங்கள் தீய எண்ணத்தோடு கேட்கிறீர்கள் சிற்றின்ப நாட்டங்களை நிறைவேற்றவே கேட்கிறீர்கள். விபசாரர்போல செயல்படுவோரே, உலகத்தோடு நட்புக்கொள்வது கடவுளைப் பகைப்பது என்பது உங்களுக்குத் தெரியாதா? உலகுக்கு நண்பராக விரும்பும் எவரும் கடவுளைப் பகைப்பவர் ஆவார். அல்லது "மனித உள்ளத்திற்காகக் கடவுள் பேராவலோடு ஏங்குகிறார். அதற்கு அவர் அளிக்கும் அருளோ மேலானது என மறைநூல் சொல்வது வீணென நினைக்கிறீர்களா? ஆகவே, "செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குகிறார். தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்" என்று மறைநூல் உரைக்கிறது. எனவே கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள் அலகையை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப்போகும். கடவுளை அணுகிச் செல்லுங்கள் அவரும் உங்களை அணுகி வருவார். பாவிகளே, உங்கள் கைகளைத் தூய்மையாக்குங்கள். இருமனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள். உங்கள் நிலையை அறிந்து, துயருற்றுப் புலம்பி அழுங்கள். உங்கள் சிரிப்பு புலம்பலாகவும், மகிழ்ச்சி ஆழ்துயரமாகவும் மாறட்டும். ஆண்டவர்முன் உங்களைத் தாழ்த்துங்கள் அவர் உங்களை உயர்த்துவார்.

**பதில்பாடல் :** கவலையை ஆண்டவர் மேல் போட்டுவிடு
அவரே உனக்கு ஆதரவு

### நற்செய்தி : மாற்கு 9 : 30 - 37

அக்காலத்தில் ,யேசுவும் அவருடைய சீடர்களும் புறப்பட்டுக் கலிலேயா வழியாகச் சென்றார்கள். அது யாருக்கும் தெரியக்கூடாது என்று இயேசுவிரும்பினார்.ஏனெனில், "மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார் அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள். கொல்லப்பட்ட மூன்று நாள்களுக்குப் பின் அவர் உயிர்த்தெழுவார்" என்று அவர் தம்சீடருக்குக் கற்பித்துக் கொண்டிருந்தார்.அவர் சொன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. அவரிடம் விளக்கம் கேட்கவும் அவர்கள் அஞ்சினார்கள்.அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்தார்கள். அவர்கள் வீட்டில் இருந்தபொழுது இயேசு, "வழியில் நீங்கள் எதைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்தீர்கள்?" என்று அவர்களிடம் கேட்டார்.அவர்கள் பேசாதிருந்தார்கள். ஏனெனில் தங்களுள் பெரியவர் யார் என்பதைப்பற்றி வழியில் ஒருவரோடு ஒருவர் வாதாடிக்கொண்டு வந்தார்கள்.அப்பொழுது அவர் அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்றார்.பிறகு அவர் ஒரு சிறுபிள்ளையை எடுத்து, அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அரவணைத்துக்கொண்டு,"இத்தகைய சிறுபிள்ளைகளுள் ஒன்றை என்பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவர் என்னைமட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு ஒவ்வொரு முறையும் தம் பாடுகளை முன்னறிவிக்கும் போதும் அதற்கு நேர் மாறான செயல் பாட்டை சீடர்கள் மேற் கொள்வதைப் பார்க்கிறோம். இயேசு தன்னுடைய பாடுகளை முதன்முறையாக அறிவிக்கும் போது சீமோன் பேதுருவிடமிருந்து எதிர்ப்பு வருகின்றது. இயேசு இரண்டாம்முறை தன்னுடைய பாடுகளை முன்னறிவித்த பிறகு சீடர்கள் யார் பெரியவர் என்று சண்டையிட்டனர். மூன்றாம் முறை பாடுகளை முன்னறிவித்த பிறகு யாக்கோபுவும் யோவானும் பதவி கேட்கின்றனர். இயேசுவைப் பொறுத்தளவில் அவரது பாடுகள் மற்றும் சிலுவைச்சாவு என்பவை அவரது துன்பங்களை ஏற்கும் தன்மையையும், தன்னையே வெறுமையாக்குதலையும் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் சீடர்களோ அதற்கு நேர்மாறாக துன்பம் இல்லாத வாழ்வுக்கு ஏங்கக்கூடியவர்களாகவும் , தங்களை உயர்த்திக் கொள்ளக் கூடியவராகவும் பதவி ஆசை பிடித்தவர்களாகவும் இருக்கின்றார்கள். இயேசுவின் மன நிலைக்கும் அவரை பின்பற்றுபவர்களாக தங்களைக் கருதிக்கொள்பவர்களின் மனநிலைக்குமிடையே எவ்வளவு வேறுபாடுகளும் வித்தியாசமும் இருக்கிறது என்பதே இங்கு நாம் கற்றுக்கொள்ளும் பாடம். இயேசுவின் பணிவாழ்வுக்கு தூண்டுகிறார். நாமோ பகட்டான வாழ்வுக்கு ஏங்குகின்றோம். இயேசு தற்கையளிப்புக்கு நம்மை அழைக்கிறார். நாமோ தன்மைய சிந்தனையிலேயே வாழ்கின்றோம். பிறர்நலனுக்காக நம்மை வெறுமையாக்க இயேசு நம் ஒவ்வொருவரையும் இன்று அழைக்கிறார். நாம் தயாராக இருக்கின்றோமா? உணர்ந்து வாழ அருள் தாரும் ஆண்டவரே.